4. வரவு–செலவுத் திட்டம், 2018–2019, பொது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018–2019 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம். (குறுக்கீடுகள்) விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. உதயசூரியன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

ராம ராஜ்ய ரத யாத்திரையை தமிழகத்தில் அனுமதித்தது குறித்து—*தொடர்ச்சி*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இதைத் தவிர எனக்கு, (குறுக்கீடுகள்) எவ்வளவுதான் உங்களிடத்திலே என்னுடைய வேண்டுகோளை வைக்க முடியும். (குறுக்கீடுகள்) எவ்வளவுதான் வேண்டுகோளை வைத்தாலும் நீங்கள் செவி சாய்க்காமல் இப்படிச் செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) அவையை நடத்த விடுங்கள். (குறுக்கீடுகள்) அவையை நடத்த எனக்கு அனுமதி கொடுங்கள். (குறுக்கீடுகள்) இப்படிச் செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) எனக்கு வேறு வழியில்லை. (குறுக்கீடுகள்) நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்).

முற்பகல் 11–35

அவையை நடத்த நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மீண்டும் மீண்டும் உங்களை நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) மீண்டும் மீண்டும் நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) எனக்கு அவையை நடத்துவதற்கு வேறு வழியில்லை. (குறுக்கீடுகள்) உங்கள்மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லாத நிலைக்கு என்னைத் தள்ள வேண்டாம். (குறுக்கீடுகள்) நான்

கடுமையாக எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) இவ்வளவு நேரம் என்னுடைய வேண்டுகோளை உங்களிடத்தில் வைத்தும் அவையை நடத்துவதற்கு நீங்கள் எனக்கு ஒத்துழைப்புக் கொடுக்காத காரணத்தினால் வேறு வழியில்லை. மீண்டும் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்கார்ந்து எனக்கு அவையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) மீண்டும் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவையை நடத்த எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) மீண்டும் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) அவையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) இனி உங்களிடத்தில் என்னுடைய வேண்டுகோள் எடுபடாத காரணத்தினால் வேறு வழியின்றி உங்கள்மீது நான் நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை வந்திருக்கிறது. (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரையும் அவையிலிருந்து வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, நீங்கள் நடந்த இவ்வளவு நிகழ்வுகளையும் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். எவ்வளவு கடுமையாக நடந்துகொண்டனர். அவர்களிடத்தில் எவ்வளவு கீழிறங்கி, என்னுடைய வேண்டுகோளை வைத்து அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுங்கள் என்று நான் கேட்டேன். இன்றைக்கு அவையை நடத்தவிடாமல் அவர்கள் குளறுபடி செய்திருக்கிறார்கள். அவர்கள் இந்த அவையை நடத்தவிடாமல் கடுமையாக என்னை பாதிப்புக்குள்ளாக்கியிருக்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் பார்த்துவிட்டு திரும்பவும் அதற்கே போகிறீர்கள். இந்தப் பிரச்சினையில் உங்கள் நிலை என்ன என்பதை உங்களுடைய முடிவுக்கு விட்டுவிடுகிறேன். நீங்கள் அதைச் சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 மார்ச் 20]

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கூறிய ** அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். அதேபோல எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபொழுது சொன்ன ** என்கின்ற வார்த்தையை ஏற்கெனவே நீக்க உத்தரவிட்டேன். மீண்டும் உத்தரவிடுகிறேன். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–40

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஸ்டாலின் அவர்கள் பேசுகின்றபோது கூறிய ஒவ்வொரு வார்த்தையும் . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *தமிழகத்தில் ** (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார், நீங்கள் நின்று கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) பிறகு எப்படி? பிறகு, நான் நடவடிக்கைதான் எடுப்பேன். (குறுக்கீடு) நீங்கள் நின்றுகொண்டேயிருந்தால் எப்படி? (குறுக்கீடு) அது முறையல்ல. உட்காருங்கள், நீங்கள். (குறுக்கீடுகள்) உட்காருவதற்குத்தானே நான் உங்களை அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருவதற்குத்தானே நான் உங்களை அனுமதித்திருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் என்ன சொல்ல வேண்டுமோ, அதைச் சொல்லுங்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பேசும்போது நீங்கள் இடையூறு செய்ய வேண்டாம். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவராகிய நீங்கள் மிகவும் கீழே இறங்கி, பணிவோடு எதிர்க்கட்சிகள் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு வாதங்களையும் பொறுமையாகக் கேட்டு, அதற்குப் பிறகு உங்களுடைய தீர்ப்பை வழங்குகின்ற*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 மார்ச் 20

ஒரு நல்ல நடைமுறையை கடைப்பிடித்து வந்திருக்கின்றீர்கள். அதை எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சரியாக புரிந்துகொள்ளவில்லையோ அல்லது புரிந்தும், புரியாமல் நடந்து கொண்டிருக்கின்றார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது. தமிழக சட்டமன்ற வரலாற்றில் இதுவரை இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர் இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டு, பேச ஆரம்பித்ததிலிருந்து—தமிழகம் இன்றைக்கு அமைதிப் பூங்கா மாநிலமாக, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எந்தளவிற்கு அரசை, சட்டம் ஒழுங்கை, சட்டத்தின்படி ஆட்சி நடத்திட வேண்டுமென்று எண்ணி ஆட்சி செய்தார்களோ, அதன்படிதான் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்களுடைய தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைப் பொறுக்க முடியாமல் தி.மு.க. தலைவர் திரு. ஸ்டாலின் அவர்கள் ஏதாவது ஒரு பிரச்சினையை எழுப்பி—மக்களை திசை திருப்பி, தமிழகத்தில் அரசியல் இலாபம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில்,** அவர் கலந்து பேசி, இம்மாதிரியான சூழ்நிலையை தமிழகத்தில் ஏற்படுத்துகின்ற முயற்சியை முன்னெடுத்திருக்கின்றார்கள்.

இந்த ரத ஊர்வலம், ஐந்து மாநிலங்கள் வழியாக தமிழகத்தை வந்தடைகின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. அதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து மாநில அரசுகளும் அனுமதி கொடுத்துள்ளன. காங்கிரஸ் ஆளுகின்ற கர்நாடக மாநிலத்திலும்கூட அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) கம்யூனிஸ்டு ஆளுகின்ற மாநிலங்களில்கூட அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. அந்த மாநிலங்களிலெல்லாம் ஊர்வலம் வந்து, அமைதியாகச் சென்றிருக்கின்றது. இங்கே காங்கிரஸ்காரர்களும், அவர்களோடு இணைந்து, எழுந்து கோஷம் போடுகின்ற ஒரு சூழலை ஏற்படுத்துவது, காங்கிரஸ் கட்சிக்கு உகந்ததுதானா என்பதை நீங்கள் சிறிதுகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) அண்ணே, அந்தப் பிரச்சினை வேறு. இன்றைக்கு நடைபெறும் சூழ்நிலையை நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இந்த ரத யாத்திரையின்போது, ** வார்த்தைகளோ, இங்கே வாழுகின்ற மக்களைப் பிரித்தாளுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற வார்த்தைகளோ இருந்தால், தமிழக அரசு அதைக் கட்டுப்படுத்தி, தடுத்து நிறுத்தும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக்

** மாண்புமிகு பேரவைத் துணைதலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 மார்ச் 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீ ராமதாச மிஷன் யூனிவர்சல் சொசைட்டி என்கிற ஓர் அறக்கட்டளை இந்த ஊர்வலத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. இதற்கு அரசியல் சாயம் பூச வேண்டும் என்று திரு. ஸ்டாலின் அவர்கள், நடைபெற்றுக்கொண்டிருப்பது ** பிரயோகப்படுத்தியிருக்கிறார். அவர் பேசிய முதல் வார்த்தையிலிருந்து கடைசி வார்த்தை வரை, வன்முறையைத் தூண்டுகிற விதமாக இருக்கின்ற காரணத்தினால், முழுமையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

ஆகவே, காங்கிரஸ் கட்சியினுடைய நண்பர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் நீங்கள் தீர யோசனை செய்து, இதில் நல்ல முடிவை எடுக்க வேண்டும். எதற்கெடுத்தாலும் தி.மு.க. எழுந்திருக்கும்போது, நீங்களும் எழுந்திருக்கின்ற ஒரு சூழ்நிலையை தமிழக சட்டமன்றத்திற்குள் கைவிட வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கென்று மிகப் பெரிய பாரம்பரியம் இருக்கிறது, வழி இருக்கிறது, கொள்கை இருக்கிறது, கோட்பாடு இருக்கிறது. அவற்றையெல்லாம் இங்கு சட்டமன்றத்தின் உள்ளே உட்கார்ந்து, காற்றில் பறக்கவிடுகின்ற ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்கிவிடாதீர்கள் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீங்கள் அனைவரும் பொறுமையானவர்கள், நல்லவர்கள், உட்காருங்கள். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் நீங்கள் மிகவும் பொறுமையாக 25 நிமிடங்கள், அவர்களுக்கு எவ்வளவோ அறிவுரைகள் சொல்லியும் கேட்காமல் இது மாதிரியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது மிகவும் வருத்தத்தை அளிக்கிறது. அவர்களை மீண்டும் நீங்கள் அழைத்து, புத்திமதி சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கரி, இராமசாமி, சொல்லுங்கள். (குறுக்கீடு) முழுக்க முழுக்க எதிர்க்கட்சித் தலைவர் பேசியதில் கடுமையாக ** மாண்புமிகு துணை முதலமைச்சர் வைத்த வேண்டுகோளினை ஏற்று, அவர் பேசிய அந்தக்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

குறிப்புகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. கரி. இராமசாமி, சொல்லுங்கள். என்ன? நான் அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தருகிறீர்களா? இல்லையா?

திரு. கரி. இராமசாமி: ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அவசரம் இல்லை.

திரு. கரி. இராமசாமி: ஏன் அவசரப்படுகிறீர்கள்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அவசரம் இல்லை.

திரு. கரி. இராமசாமி: நாங்கள் அதைச் செய்யவில்லை. நாங்கள் உங்களுடைய time–ஐ waste செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, சொல்லுங்கள்.

திரு. கரி. இராமசாமி: தமிழகத்திலே ஒரு நல்ல நிலைமை ஏற்பட வேண்டுமென்பதற்காக நாங்கள் சொல்கிறோம். (குறுக்கீடுகள்) பாத யாத்திரை நடத்துகிறோம். ஆனால் அவர்கள் ரத யாத்திரையை நடத்துகிறார்கள். ரத யாத்திரையின் விளைவு மிக மோசமான நிலைமையைக் கொண்டு வந்துவிடும். (குறுக்கீடுகள்) எனவே, ** என்று சொல்லி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராமசாமி, நீங்கள் மதம் சம்பந்தமாகக் கூறிய அத்தனை வார்த்தைகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. கரி. இராமசாமி: இல்லை, இல்லை. குற்றமாக ஒன்றுகூடச் சொல்லவில்லையே, ஏன் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தேவையில்லாமல் ஏன் பேசுகிறீர்கள்? நீங்கள் உங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க வாய்ப்புத் தந்தேன். அதற்குப் பதிலாக நீங்கள் வேறு எதை எதையோ record செய்கிறீர்கள். நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. விடுங்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.